# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

* மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க

01. வாய்மொழியைப் பயன்படுத்தாது ஒரு நடிப்பாகத்தை சித்தரிப்பது
    1. ஆள்மயமாதல் 2. புத்தாக்கம் 3. நடனம் 4. ஊமம்
02. கட்டியக்காரன் முறைமை வரும் நாடக மரபு
    1. சிங்கள நாடகம் 2. தமிழ்க்கூத்து 3. சமஸ்கிருதநாடகம் 4. கிரேக்க அரங்கு
03. அரங்கில் செவிப்புல ரீதியில் தாக்கத்தை பார்ப்போருக்கு ஏற்படுத்தும் துணைக்கலை
    1. காட்சி விதானிப்பு 2. அரங்க ஒளியூட்டுகை
    3. இசைவிதானிப்பு 4. வேடஉடை ஒப்பனை
04. நடிப்பின் போது உடலை நெகிழ்வாக வைத்திருப்பதற்கு உதவும் பயிற்சி
    1. தளர்வுப்பயிற்சி 2. சுவாசப்பயிற்சி
    3. குரற்பயிற்சி 4. உளப்பயிற்சி
05. குரற்பயிற்சியாக அமையும் அரங்க விளையாட்டு
    1. ஆடும்வீடும் 2. 7 UP 3. காகம் உயிர்பெறுதல் 4. கோழிகோட்டான்
06. பின்வருவனவற்றுள் வேடமுகம் பயன்படுத்தப்படும் சிங்கள நாடக மரபு.
    1. நூர்த்தி 2. நாடகம் 3 கோலம் 4. சன்னியக்கம
07. பின்வருவனவற்றுள் இசை நாடகத்திற்கு வழங்கப்படும் பெயர் அல்லாதது.
    1. பார்சி நாடகம் 2. ஸ்பெசல் நாடகம்
    3. அண்ணாவி மரபு நாடகம் 4. பிரகசனநாடகம்
08. நாடகத்தின் இறுதி ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்.
    1. வாசிப்பு ஒத்திகை 2. வெள்ளுடுப்பு ஒத்திகை
    3. மனன ஒத்திகை 4. செயல்ஒத்திகை
09. ஆரோடு நோகேன் நாடகம்.
    1. சிறுவர் நாடகம் 2. சமூகநாடகம்
    3. பாடசாலை நாடகம் 4. பாநாடகம்
10. பாத்திரமொன்றின் பௌதீக பண்பாக அமையாதது.
    1 வயது 2. பால் 3. நிறம் 4. சமயம்
11. இசை நாடகத்தின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர்.
    1. பம்மல் சம்பந்த முதலியார் 2. தவத்திருசங்கரதாஸ்சுவாமிகள்
    3. வி.வி.வைரமுத்து 4. கிருஷ்ணாழ்வார்

12. கண்ணகி அம்மன் சடங்கோடு தொடர்புடைய சடங்கு

 1 சூரன்போர் 2. குளிர்த்தி 3. வேட்டைத்திருவிழா 4. மானம்பூ

13. கதவடித்துப்பாடும் நிகழ்வு இடம் பெறும் சடங்கு

 1. பாஸ்கா 2. வேட்டைத்திருவிழா 3. பான்டவர்வனவாசம் 4. சூரன்பேரர்

14. வடபாங்கு கூத்துக்களில் கதைச்சுருக்கத்தினை அறிமுகம் செய்யும் பாத்திரம்

 1. கட்டியக்காரன் 2. பபூன்
 3. புலசந்தோர் 4. கோமாளி

15. ஆரோடு நோகேன் நாடகத்தில் இடம் பெறும் படிப்பு மேசை, நிலைக்கண்ணாடி, தையல் இயந்திரம் என்பன உள்ளடக்கப்படும் சித்தரிப்பு.

 1. உடல் வழிச்சித்தரிப்பு 2 குரல் வழிச் சித்தரிப்பு
 3. உணர்ச்சி வழிச்சத்தரிப்பு 4. காண்பியவழிச் சித்தரிப்பு

16. ஆரோடு நோகேன் நாடகம் எவ்வகை மோடியைச் சார்ந்தது.

 1. யதார்த்தம் 2. யதார்த்த விரோதம்
 3. மோடிமை கலந்த யதார்த்தம் 4. இயற்பண்பு

17. கட்டிளமைப்பருவத்து மாணவர்களின் மனவெழுச்சிப் பிரச்சினையை விவாதிக்கும் நாடகம்.

 1. புதியதொரு வீடு 2. ஆறொடு நோகேன்
 3. எந்தையும் தாயும் 4. சங்கிலி

18. காமன் கூத்து ஆடப்படும் பிரதேசம்

 1. யாழ்ப்பாணம் 2. மன்னார் 3. மலையகம் 4. மட்டக்களப்பு

19. ஒருகுழு இன்னொரு குழுவை மந்திர தந்திரங்களால் மயக்கும் ஆட்டம்

 1. காத்தவராயன் கூத்து 2. மகிடிக்கூத்து
 3. கோவலன் கூத்து 4. வடமோடிக்கூத்து

20. கியூசீற்றுடன் (Que Sheet) தொடர்புடைய அரங்கக்கலைஞர்

 1. ஒளியமைப்பாளர் 2 இசையமைப்பாளர்
 3. காட்சியமைப்பாளர் 4 நெறியாளர்

21. நாடக ஆசிரியரின் சிந்தனைகளை நேரடியாக பார்வையாளரிடம் சேர்க்கும் கலைஞன்.

 1. நடிகன் 2. நெறியாளர் 3.தயாரிப்பாளர் 4. காட்சிவிதானிப்பாளர்

22. நாடகத்தில் உடல் அசைவுகளின் பயன்பாடு.

 1. மேடையில் இடங்களைச் சுட்டிக் காட்டுதல்
 2. நாடக வகையை எடுத்துக்காட்டுதல்
 3. பாத்திர உணர்வுகளை எடுத்துக்காட்டுல்
 4. நாடகத்திற்கு வலுவூட்டுதல்

23. மேடை முகாமையாளரின் பணிகளில் ஒனறு.

 1. நாடகத்தை நெறியாள்கை செய்தல்
 2. நாடகத்தை தயாரித்தல்
 3. நுழைவுச் சீட்டுக்களை விற்பளை செய்தல்
 4. காட்சிகளை ஒழுங்குபடுத்தல்

24. நடிகர் வேடமுகத்தை அணிவதன் மூலம்.

1. தன்னை உருமாற்றுகின்றார்
2. பாத்திரத்தை சுட்டுகிறார்
3. வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றார்
4. மேற்கூறியயாவும்

25. யதார்த்த மோடி நாடகத்திற் காணப்படும் பிரதான இயல்பு.

1. சொல்லாடல் சந்தம், தாளம் ஆகியவற்றுக்கு ஏற்றதாக காணப்படும்
2. மேடைப்பின்னணி குறியீடாக காணப்படும்
3. வேட உடை மிகைப்படுத்திக் காட்டப்படும்
4. ஒப்பனை இயல்பாக காணப்படும்

26. அரங்கிற்கான இசையின் நோக்கம்.

1. நாடகக் காட்சியின் காலத்தைக் குறித்தல்
2. நாடகத்தின் ஒப்பனையை மிளிரச் செய்ய
3. நாடகப்பாடலுக்கு மெட்டுக்கொடுத்தல்
4. இசை அமைப்பாளரின் திறமையைக் காட்டல்

27. அரங்கில் நடைபெறும் விடயத்தை குறிப்பாகக் காட்டப் பயன்படும் ஒளிவகை.

1. பெருக்கொளி 2. வர்ணச்சில்லு 3. பொட்டொளி 4. கரையொளி

28. மொட்டைத் தலையுடன் ஒன்றைப் பிராமணன்'' என்ற பாடல் இடம் பெறும் நாடகம்.

1. இராவணேசன் 2. காமன்கூத்து 3. பூதத்தம்பி 4. வள்ளிதிருமணம்

29. நியமமில் அரங்கில் நடிகர் தெரிவிற்காகப் பயன்படுத்தப்பெறும் நுட்பங்களுள் ஒன்று.

1. திறந்ததெரிவு 2. மூடிய தெரிவு 3 சல்லடைத்தெரிவு 4. புதிதளித்தல்

30. அம்பா பாடல்கள் எச்சமூகத்தின் வாழ்வியலோடு தொடர்புடையது.

2. விவசாயிகள் 2. மீனவர்கள் 3. வேடுவர் 4. தோட்டத்தொழிலாளர்

31. கூத்தில் காலமேற்றுதல் எனும் ஆடல்வகை குறிப்பது.

1. பாத்திரவரவு
2. நடிகர் அரங்கைவிட்டு வெளியேறுதல்
3. தூரதேசம் செல்லுதல்
4. அரங்கில் தாக்கும் போது

32. பின்வருவனவற்றுள் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்துக்களுள் அடங்காதது.

1. எஸ்தாக்கியார்
2 தேவசகாயம்பிள்ளை
3. கருங்குயில் குன்றத்துக்கொலை
4. பப்பிரவாகன

33. களத்துமேடு எனும் அரங்க வெளியில் ஆடப்படும் ஆற்றுகைவடிவம்.

1. கூத்து 2. கோவம் 3. கொக்கரி 4. நாடகம்

34. பின்வருவனவற்றுள் வடமோடிப் பாங்கில் அமைந்த கூத்து.

1. காத்தவராஜன் கூத்து
2. இராமநாடகம்
3. அலங்கார ரூபன்
4 கோவலன் கூத்து

35. படத்தில் காட்டப்படும் படம்.



1. பெருக்கொளி
2. 2. பரப்பொளி
4. பொட்டொளி
5. 4. வர்ணச்சக்கரம்

36. படத்தில் காட்டப்படும் காட்சி குறிக்கும் நாடகம்.



1. வள்ளிதிருமணம்
2. இராவனேசன்
3. பூதத்தம்பி
4. மகிடி

37. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்.



1. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
2. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3. கலையரசு க.சொர்ணலிங்கம்
4. மகாகவி து.உருத்திரமூர்த்தி

38. படத்தில் காட்டபப்பட்டுள்ள சிங்கள நாட்டார் அரங்கு



1. கோலம்
2. சொக்கறி
3. நூர்த்தி
4. நாடகம்

39. படத்தில் காட்டப்பட்டுள்ள நடனம் ஆடப்படும் இடம்.



1. தமிழ்நாடு
2. கேரளா
3. கர்நாடகா
4. மணிப்புரி

40. பின்வரும் மேடைப்பரப்புகளில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பகுதிகாகக் கருதக்கூடியது.

1. UR    2. CL    3. DL    4. UC

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாவது வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

*(01)* சுருக்கமான விடை தருக

1. புதிதளித்தல் என்றால் என்ன?
2. ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டு ஒன்று தருக?
3. சுற்றிவரப் பார்ப்போரைக் கொண்ட அரங்கவெளி யாது?
4. ரட்டயக்கும் சடங்கின் பிரதான நோக்கம் யாது?
5. விவி வைரமுத்து உருவாக்கிய நாடக சபையின் பெயர் யாது?
6. புதியதொரு வீடு நாடகத்தை நெறியாள்கை செய்தவர் யார்?
7. காமன் கூத்தின் பிரதான வாத்தியம் எது?
8. ஈழத்து இசை நாடக வரலாறு எனும் நூலை எழுதியவர் யார்?
9. பாத்திரம் ஒன்றின் உளவியற் பண்புகள் 2 தருக?
10. பொட்மொளியின் இரு வகைளையும் குறிப்பிடுக

(12 புள்ளிகள்)

*(02)*
1. ஆற்றுகைக் கலைகளின் சிறப்பியல்புகள் 6 தருக?
2. மேடை நாடகத்திற்கும் நடனம், ஓவியம் ஆகிய கலைகளிற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(6 + 6 = 12 புள்ளிகள்)

*(03)*
1. அரங்கப் பயிற்சிகள் என்றால் என்ன?
2. உடற்பயிற்சியின் முக்கியத்துவங்கள் நான்கைக் குறிப்பிடுக
3. நடிப்பு நுட்பங்களைக் கூறி அவற்றை விளக்குக.

(2 + 4+ 6 = 12 புள்ளிகள்)

*(04)*
1. இலங்கையில் பயில் நிலையில் கூத்து ஆடப்படும் பிரதேசங்களையும் அங்கு ஆடப்படும் கூத்துக்களையும் பட்டியற்படுத்துக.
2. மேலே நீர் குறிப்பிட்ட கூத்துக்களில் எவையேனும் இரண்டின் ஆற்றுகைப் பண்புகளை விளக்குக?

(4+ 8 = 12 புள்ளிகள்)

(05) 1. புதியதொரு வீடு நாடகத்தை எழுதியவர் யார்?
2. புதியதொரு வீடு நாடகத்தின் கரு யாது?
3. புதியதொரு வீடு நடகத்தின் மோதுகையை குறிப்பிடுக.
4. இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களைக் குறிப்பிட்டு இரு பாத்திரங்களின் பாத்திரப்பண்புகளை விளக்குக?

(2 + 2 + 2 + 6 = 12 புள்ளிகள்)

(06) 1. நாடகத்தில் பயன்படுத்தப்படும் துணைக்கலைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. நாடகத்தை தயாரிக்கும் போது காட்சி விதானிப்பை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினை சுருக்கமாக விளக்குக.
3. ஒப்பனையை மேற்கொள்ளும் படிமுறைகளை குறிப்பிடுக

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(07) யாதாயினும் மூன்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.
1. நெறியாளர்
2. தயாரிப்பாளர்
3. பார்வையாளர்
4. சொக்கரி
5. புதிதளித்தல் (3 x 4 = 12 புள்ளிகள்)